செய்தி வெளியீடு எண்: 468 நாள்: 23.09.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக இளைஞர்களுக்கு உரிய திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு வழங்க திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு செயல்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின்படி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் 2013ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, தமிழ்நாட்டில் பல்வேறு துறைகள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் திறன் பயிற்சி திட்டங்களின் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆட்டோமொபைல், கட்டுமானம், சுகாதாரம், ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள், தகவல் தொழில்நுட்பம், வேளாண்மை, தோல் மற்றும் தோல்பொருட்கள், அழகுகலை, லாஜிஸ்டிக்ஸ், வங்கிநிதி சேவை மற்றும் காப்பீடு, ஊடகம் (ம) பொழுதுபோக்கு, சில்லறை வர்த்தகம், மின்னனுவியல், பாதுகாப்பு சேவைகள், தொலைத் தொடர்புத்துறை, இரத்தினம் மற்றும் ஆபரணங்கள் ஆகிய துறைகளில் கட்டணம் ஏதுமின்றி திறன்பயிற்சி அளித்து வருகிறது. இந்த திறன் பயிற்சியில் 5ஆம் வகுப்பு, 8–ம் வகுப்பு, 10–ம் வகுப்பு, 12–ம் வகுப்பு, டிப்ளமா மற்றும் பட்டம் பெற்ற இளைஞர்கள் சேரலாம். இத்தகைய திறன் பயிற்சி முடித்தவுடன் தனியார் துறையில் பணிநியமனம் பெற்றுத்தர ஆவன செய்யப்படும். பயிற்சிக்காலம் 1 மாதம் மூலம் 6 மாதங்கள் வரை பயிற்சிக்கேற்றவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த திறன் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு நாளொன்றுக்கு போக்குவரத்து படியாக ரூ.100/– வழங்கப்படும்.

மேலும் இந்த திறன் பயிற்சிகளில் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி பயிற்சியில் சேர்க்கை செய்யும் பொருட்டு திறன் பயிற்சி விழிப்புணர்வு மற்றும் சேர்க்கை முகாம் சென்னை–81 புதுவண்ணாரப்பேட்டை, எண்:731, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் 24.09.2016 அன்று காலை 9.30 மணி முதல் மாலை 5.00மணி வரை நடை பெறவுள்ளது. இம்முகாமில் மேற்குறிப்பிட்ட தொழிற்பிரிவுகளில் திறன் பயிற்சியளிக்கும் பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொள்ள உள்ளன. இம்முகாமில் மாவட்ட தொழில் மையம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி கழகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தொழிற் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் ஆகிய நிறுவனங்களும் பங்கேற்று சுயதொழில் மேற்கொள்வதற்கான ஆலோசனைகள் மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் துவங்குவதற்கான நிதி வசதி பெறுவதற்கான ஆலோசனைகள் ஆகியனவும் வழங்கப்பட உள்ளன. இந்த விழிப்புணர்வு மற்றும் சேர்க்கை முகாமில் இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்று பயன் அடையுமாறு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: – இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.